[24th January 1972

வேலை பயில்வோர் திட்டம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வேலை பயில்வோர் திட்டத்தின்கீழ் 1970-71-ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் தேறிய தொழில் பயில்வோரின் எண்ணிக்கை என்ன?

(இ) அவர்கள் பயிற்சி பெற்ற (1) பணிகள் (2) தொழில்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற மேலவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: வேலைக்குப் பயிற்சி பெற்றவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்களா என்ற விவரம் அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பயிற்சி மட்டும்தான் கொடுக்கிறோம். பின்னால் அதை வைத்துத் தொழிற்சாலைகளில் சேர வேண்டும்.

Gudalur Industrial Co-operative Tea Factory Limited

* 13 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether (i) Machinery and (ii) Electrical equipment were purchased for the Gudalur Industrial Co-operative Tea Factory Limited in the Nilgiris district during 1970-71 and 1971-72; and

(*b*) if so, the details thereof?

கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970-71-72-ல் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைக்கு (1) இயந்திரங்களும் (2) மின்சாரக் கருவிகளும் விலைக்கு வாங்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இதற்கான பங்குகள் மக்களிடமிருந்து பெற்றும் இன்னும் செயல்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா? ஏன் அது செயல்படாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீலகிரி மாவட்டத்தில் எட்டு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன, லாபத்தில் நடைபெறுகின்றன. இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் சில இயந்திரங்கள் அதற்கு வாங்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு டெண்டர்கள் 'கால் ஃபார்' செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் முடிவெடுப்பார்கள்.

@ Printed as Appendix III on pages 64–70.

24th January 1972]

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : இப்படி ஒரு தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டது எந்த ஆண்டில் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தேதி விவரம் என்னிடத்தில் இல்லை.

Long Distance Double Decker Buses

*14. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(a) whether Double Decker buses run on long distance routes have been withdrawn with immediate effect;

(b) if so, the reasons therefor; and

(c) the number of buses so withdrawn?

நீள் தொலைவு மாடிப் பேருந்துகள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நீள் தொலைவு வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மாடிப் பேருந்துகள் உடனடியாக எடுக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அவ்வாறு எடுக்கப்பட்ட பேருந்துகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இரட்டை அடுக்குப் பேருந்துகளைப் பொது மக்கள் விரும்பவில்லை.

(உ) பதினான்கு.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : அப்பேருந்துகள் இப்போது என்ன பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தப் பேருந்துகள் சாதாரணப் பேருந்துகளாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : இதனால் எவ்வளவு நஷ்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிய விவரமில்லை.

திரு. டி. சந்தோஷம் : இப்படிப்பட்ட பேருந்துகளைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன்னால் இவை நாட்டின் இதர பகுதிகளில் பயன்படுத்தப் பட்டனவா என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவற்றை நாம் உபயோகித்தோமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிட்டத்தட்ட 200-க்கு மேற்பட்ட பேருந்துகளில் 14 பேருந்துகள்தான் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை தருகிற பலனைப்பற்றி ஆராய்ந்து அதற்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற அடிப்படையில் அவை விடப்பட்டன. மாடி பஸ்களில்